# கர்நாடக சங்கீதம்
# 20 வருடங்களுக்குப் பிறகு எப்படி இருக்கும்?

*சாருகேசி*

நியூயார்க்கில் ஒரு சாலையில் இரண்டு ஹோட்டல்கள். ஒன்றில் எக்கச்சக்க வியாபாரம். இன்னொன்றில் கூட்டமே இல்லை. நிர்வாக இயல் நிபுணர் ஒருவருக்கு இது விந்தையாக இருந்தது. இன்னொன்றில் கூட்டம் குறைவாக இருப்பதற்கு என்ன காரணம் என்று முதலாளியை நேரில் சந்தித்துக் கேட்டார். அவர் சொன்ன காரணங்கள் எதுவுமே நிபுணருக்குச் சரியாகப்படவில்லை. எவை எவை எல்லாம் காரணங்கள் என்று முதலாளி நினைத்துக் கொண்டிருந்தாரோ, அதே காரணங்கள் கும்பல் நிறைந்த ஹோட்டலுக்கும் பொருத்தமாக இருந்தன! நிபுணர், மக்களை நேரில் சந்திக்கத் தீர்மானித்தார். மக்கள் சொன்ன காரணங்களோ, முதலாளி சொன்ன காரணங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவையாக இருந்தன! அவராக ஊகம் செய்துகொண்டு கூட்டம் வராததற்கான காரணங்களைச் சொன்னாரே தவிர, மக்களிடமிருந்து எதையும் அறியவில்லை. நிர்வாக இயல் நிபுணர் தாம் மக்களைச் சந்தித்து அறிந்துகொண்ட காரணங்களைக் கேட்டு அந்த முதலாளி அசந்து போனார். அவற்றை எல்லாம் திருத்திக் கொண்ட பிறகு, தமது ஹோட்டலிலும் கூட்டம் நிறைய வருவதை உணர்ந்து மகிழ்ச்சியில் திளைத்தார் அந்த முதலாளி!

“ஸிக்ஸ் ஸிக்மா” என்ற நவீன தர-அறிவியல் கலையில் தேர்ச்சி பெற்ற நிபுணர் ஒருவர், சமீபத்தில் தெரிவித்த விவரம்தான் இது.

சென்னையைப் பொறுத்தவரை, குறிப்பாக மயிலாப்பூர் - தி.நகர் வாசிகளைப் பொறுத்த வரை வாரத்துக்கு உத்தேசமாக நான்கு இசைக் கச்சேரிகள் கேட்கிற வாய்ப்புகள் இருப்பதாக அறிகிறேன். “ஹிந்து” நாளிதழில் வரும் வரி விளம்பரப் பக்கத்தைப் பார்த்தால் இது சரிதான் என்று தோன்றுகிறது. நானே கிட்டத்தட்ட நான்கு ஐந்து கச்சேரிகள் வரை ஒரு வாரத்தில் கேட்கிற வாய்ப்பை உணர்ந்திருக்கிறேன். ரசித்து அனுபவித்திருக்கிறேன்.

அப்படி வெவ்வேறு சபாக்களில் தொடர்ந்து பார்க்கும் ரசிகர் முகங்கள் என் மனசில் பதிந்து போய்விட்டன.

இவர்கள் ஏன் விடாது கர்நாடக சங்கீதம் கேட்க சபை சபையாக வருகிறார்கள்? இவர்களை இந்தச் சங்கீதம் ஈர்க்கிறதால்தானே இப்படி தேடித் தேடி வந்து கேட்கிறார்கள்? அவர்களிடம் பொதுவாக ஆறு கேள்விகள் கேட்போம்: அவர்கள்

பதில்களை அப்படியே ஏற்றுக்கொள்வோம்; வெவ்வேறு பின்னணியிலிருந்து வரும் இந்த ரசிகர்களின் ருசி எல்லாம் எப்படி இருக்கிறது என்று பார்ப்போம் - எனத் தீர்மானித்தேன்.

கச்சேரி முடிகிற சமயத்தில் நானாக இவர்களிடம் போய் என்னை அறிமுகம் செய்து கொண்டேன். என் கேள்விகள் ஆறையும் அவர்களிடம் வைத்தேன். [இவர்களை நான் தனித்தனியாகத்தான் சந்தித்தேன்]. இவர்கள் எல்லாம் தீவிர கர்நாடக சங்கீதப் பிரியர்கள். பலர் உயர் பதவி வகித்து ஓய்வு பெற்றவர்கள். ஒருவர் மட்டும் பிரபல நிறுவனம் ஒன்றில் இப்போதும் பணி புரிபவர்.

என்றுடைய கேள்விகள், இதோ:

1. நீங்கள் கர்நாடக இசையை ரசிக்கும்போது, தெலுங்கு, சம்ஸ்கிருதம் என்ற மொழிகள் குறுக்கிடுவதாக நினைக்கிறீர்களா?

2. கச்சேரிகளில் ராகம்-தானம்-பல்லவி இருப்பது அவசியமா?

3. ராகங்களின் பெயர்களை ஒவ்வொரு பாட்டுக்கு முன்பும் அறிவிப்பது நல்லதா, நல்லதில்லையா?

4. கர்நாடக சங்கீதத்தில் தமிழ் கீர்த்தனங்கள் அதிகம் பாடினால், இன்னும் நிறைப் பேர் ரசிக்க வருவார்கள் என்பதை ஒப்புக்கொள்வீர்களா?

5. உங்கள் தராசுக்கோல்படி இன்றைக்கு யார் யார் முதல் படி, இரண்டாம், மூன்றாம் படியில் இருப்பதாக நினைக்கிறீர்களா?

6. இன்னும் 10-20 வருடங்களுக்குப் பிறகு கர்நாடக இசைக்கு ஆதரவு எப்படி இருக்கும் என்று ஊகிக்கிறீர்கள்?

இவை எளிமையான கேள்விகள். இவற்றுக்கு முதலில் பதில் கூறியவர் வி.ஆர். கிருஷ்ணன். [இவர் ஒவ்வொரு கச்சேரியிலும் சிரத்தையாக கீர்த்தனையின் முதல் வரியையும், ராகத்தின் பெயரையும் குறித்து வைத்துக் கொள்ளுவார்] ஒவ்வொரு பதிலுக்கு முன்னாலும் மேற்கண்ட கேள்விகளைப் படித்துக் கொள்ளுங்கள். சரிதானே?

1. இல்லவே இல்லை. ஏனென்றால், சாகித்யத்தின் சிறப்பும், அதைப் பாடுபவர்களின் சங்கீத அனுபவமே நம் சிந்தையில் நிற்கின்றன. மொழி ஒரு பிரச்சனை ஆவதில்லை. நமக்குத் தெரியாத மொழியாக இருந்தாலும், அவர்கள் அனுபவித்துப் பாடும் தொடர்களை நாமும் பாடும்படி ஓர் உற்சாகம் பிறக்கிறது.

2. ராகம்-தானம்-பல்லவி 3 மணி கச்சேரிகளில் அவசியம் இருக்கலாம்; வரவேற்போம். அப்போது விஸ்தாரமாகப் பாட நேரம் கிடைக்கும். இரண்டு, இரண்டரை மணிக் கச்சேரிகளில் ஒப்புகாகவே பாடுகிறார்கள். ராக அநுபவமோ, தானத்தின் சிறப்போ முழுவதும் வெளிப்படுவதில்லை. ஆனால் ஒன்று: ராகம்-தானம்-பல்லவி பாடாததால் கச்சேரிகள் சோடை போவதில்லை. ராக மாலிகை சுவரங்கள் பாடுவது ரசிகர்களுக்காக மட்டுமே. ஆனால், ராக விஸ்தாரம், தானம் இரண்டும் வித்துவானின் திறமையைக் காட்டத்தான். பல்லவி ராகமாலிகை பெரும்பாலும் ரசிகர்களைத் திருப்திப்படுத்தவே பாடப்படுகிறது. அதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் மதுரை மணி அய்யர். வாத்யக் கச்சேரிகளில் ராகம்-தானம்-பல்லவி சாகித்யத்துடனே சேர்ந்து நன்கு பரிமளிக்கிறது – எவ்வளவு நேரக் கச்சேரி ஆனாலும் சரி.

3. இராகங்களின் பெயர்கள் அறிவிப்பது நல்லதுதான். தவறுதலாக இராகங்களைப் பற்றி பேசிக்கொள்ளுவதைத் தடுக்கலாம் அல்லவா? இராகங்களைக் கண்டுபிடிப்பது என்ற சுவாரசியமான அனுபவம் இதனால் இல்லாமல் போய்விடுகிறது உண்மைதான். அதற்காகவே வேண்டுமானால், இராகம் பாடிய பின்னர் அதைப் பற்றி பாடகர் அறிவிக்கலாம்.

4. தமிழ் கீர்த்தனைகளை அதிகம் பாடினால் இன்னும் நிறையப்பேர் வருவார்கள் என்பதை ஒப்புக்கொள்கிறேன். தமிழ் அறிந்த பல ரசிகர்கள் திரை இசையிலிருந்து கர்நாடக இசையை நோக்கி, நிச்சயம் வர வாய்ப்புகள் இருக்கின்றன. இசையை ரசிக்க மொழி அவசியமில்லை என்றாலும், தாய்மொழியில் ஒரு கீர்த்தனையை நன்கு அநுபவித்துப் பாடினால் அதன் சுவையே தனியானது. அது ரசிகர்களை அதிகம் ஈர்க்கும்.

5. என்னைப் பொறுத்த வரையில், கர்நாடக இசையில், பெண் கலைஞர்களில் நெ.1 – சுதா ரகுநாதன், 2 – பாம்பே ஜெயஸ்ரீ, 3 – சௌம்யா, 4 – நித்யஸ்ரீ, 5 – அருணா சாய்ராம், 6 – காயத்ரி கிரீஷ். ஆண் கலைஞர்களில் நெ.1 – விஜய் சிவா, 2 – சஞ்சய் சுப்பிரமணியம், 3 – ஓ.எஸ். தியாகராஜன், 4 – டி.எம். கிருஷ்ணா, 5 – டி.வி. சங்கரநாராயணன், 6 – உண்ணி கிருஷ்ணன். மூத்த கலைஞர்களை எடுத்துக் கொண்டால், சேஷகோபாலனும், திருக்கூர் ராமச்சந்திரனும் தனி இடம் பெறுகிறார்கள். வளர்ந்து வரும் கலைஞர்களில், வசுந்தரா ராஜகோபால், லக்ஷ்மி ரங்கராஜன், ராஜி கோபாலகிருஷ்ணன், ரஞ்சனி-காயத்ரி, நிஷா ராஜகோபால், சின்மயா சகோதரிகள், சிக்கில் குருசரண், சேலம் ஸ்ரீராம், பாலமுரளிகிருஷ்ணா.

6. பத்து-இருபது வருடங்களுக்குப் பிறகும் கர்நாடக இசை அமோகமாகவே இருக்கும். இளம் கலைஞர்களின் இப்போதைய ஈடுபாடு வரவேற்கத்தக்கது. இவர்கள் சங்கீதம் தடைபடாமல் இருக்க வேண்டும். அப்படி இருக்குமானால் கர்நாடக இசையின் வளர்ச்சிக்கு ஒருவித ஆபத்தும் வந்துவிடாது. புதிய உத்திகளுடன், கம்ப்யூட்டர் வசதிகளுடன், நன்றாகவே வளரும்.

நான் தொலைபேசியில் தொடர்பு கொண்ட அடுத்த ரசிகர் 77 வயதான எம்.ஏ. சுப்ரமணியன். 12 வயதிலிருந்து கர்நாடக இசை கேட்டு வருகிறார். ஓய்வு பெற்ற இன்கம்டாக்ஸ் அதிகாரி. இவர் பதில்களைப் பார்ப்போம்.

1. சங்கீதம் மொழிக்கு அப்பாற்பட்டதுங்க. நான் அப்பப்ப ஹிந்துஸ்தானி சங்கீதமும் கேட்கிறதுண்டு. அதனால்தான் சொல்கிறேன்.

2. இராகம்-தானம்-பல்லவி அவசியம்தான். அப்பத்தான் இராகத்தோட முழு சொரூபத்தையும் பார்க்கமுடியுது. கீர்த்தனைகள்ள அது முடியாது. இராகத்தோட முழுவீச்சும் இராகம்-தானம்-பல்லவியிலதானே கிடைக்குது! ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ரேடியோவுல இராகம்-தானம்-பல்லவி 45 நிமிஷம் போட்டுக் கிட்டிருந்தாங்க. ரசிச்சுக் கேட்டுக்கிட்டு இருந்திருக்கேன். ரசிக்கிறது கடவுள் கொடுத்த பரிசுங்க!

3. இராகத்தோட பேரை முன்னாலேயே சொல்றது நல்லதில்லை. முதல்லே சொல்லிட்டா சுவாரசியம் குறைஞ்சிடும். கேக்கறவங்களுக்கு ஒரு ட்ரெயினிங் மாதிரி இருக்கும், அறிவிக்கலேன்னா. இல்லியா?ஆபோகியா, ஸ்ரீரஞ்சனியான்னு யோசிக்கிற அனுபவமே இருக்காது. ஒரே மாதிரி சாயலுள்ள இராகங்களைக் கேக்கற போது ஒரு தனி அனுபவமா இருக்கும். பின்னால புரிஞ்சுக்கறது ஈஸியா இருக்கும்.

4. நான் ஒப்புக்கமாட்டேன். தமிழிசையை வளர்க்க பாபநாசம் சிவன் பத்தாயிரம் கீர்த்தனைகள் எழுதினாலும், அஞ்சு தொகுதி தானே வந்திருக்கு? தியாகராஜர் - தீட்சிதர்-சியாமா சாஸ்திரி - புரந்தரதாசர் கீர்த்தனைகள் எல்லாம் பாடாம உட்டாங்கன்னா ஆடியன்ஸ் கொறஞ்சு போயிடும். டிவோஷனஸ் மாதிரி பூராக்கச்சேரியும் பாடினா எஞ்சாய் பண்ண முடியாது.

5. என்னோட லிஸ்ட்: சேஷகோபாலன், டி.வி. சங்கரநாராயணன், சஞ்சய் சுப்பிரமணியன், பாம்பே ஜெயஸ்ரீ, சுதா ரகுநாதன், அருணா சாய்ராம், கோபாலகிருஷ்ணன்.

6. கர்நாடக இசை நல்லாவே இருக்கும். எனக்கு நம்பிக்கை இருக்கு. சங்கீதம் என்னிக்கும் நிரந்தரமானது. 65 வருஷமா சங்கீதம் கேட்டுக்கிட்டு இருக்கேன். அதவச்சுத்தான் சொல்றேன்.

தியாகராஜனும், என்.எஸ். மணியும் இரட்டையர் மாதிரி. எல்லாக் கச்சேரிகளுக்கும் சேர்ந்தே வருவார்கள். ஆர்.ஆர். சபாவில் அவர்கள் இருவரையும் சந்தித்து என் கேள்விகளை அவர்கள் முன் வைத்தேன்.

முதலில் என்.எஸ். மணி என்ன சொல்லுகிறார் என்று பாருங்கள்:

1. இசைக்கு மொழி தடையாக இல்லை. தமிழ்ப் பாட்டு கூடுதலாகப் புரிகிறது. ஆனாலும் பிற மொழிப் பாட்டுக்களுக்கு அது ஒரு குறையல்ல.

2. ராகம்-தானம்-பல்லவி கச்சேரிகளில் அவசியம். இராகத்தை விஸ்தாரமாகக் கேட்க முடியும். வாத்தியத்தில் தான் ராகம்-தானம்-பல்லவி இருக்கணும் என்கிற அவசியம் இல்லை.

3. அறிவிக்கிறது நல்லதுதான். இராகம் தெரியாதவர்களுக்கு நல்லது இல்லையா?

4. தமிழ் கீர்த்தனைகள் அதிகம் பாடுவதை வரவேற்க வேண்டியதுதான். பாபநாசம் சிவன், பாரதியார், கோபாலகிருஷ்ண பாரதி, பெரியசாமி தூரன் இவர்கள் பாட்டுக்களைப் பாடினால் நிச்சயம் இன்னும் கூட்டம் வரும்.

5. என்னோட லிஸ்ட் பெரிசு. ஸீனியரா, ஜுனியரா என்றெல்லாம் என்னால் பிரிக்க முடியாது. 1. டி.வி. சங்கரநாராயணன், 2. திருச்சூர் ராமச்சந்திரன், 3. டி.என். சேஷ கோபாலன், 4. வேதவல்லி, 5. வைரமங்கலம் லட்சுமி நாராயணன், 6. சுகுணா புருஷோத்தமன், 7. சஞ்சய், 8. சுதா ரகுநாதன், 9. டி.எம். கிருஷ்ணா, 10. ரஞ்சனி – காயத்ரி, 11. எம்.எஸ். ஷீலா, 12. மல்லாடி சகோதரர்கள், 13. ஹைதராபாத் சகோதரர்கள், 14. ராஜி கோபாலகிருஷ்ணன், 15. சங்கீதா சிவகுமார், 16. காயத்ரி கிரீஷ், 17. லதா ராம்சந்த், 18. விசாலாக்ஷி நித்யானந்த், 19. ராம்நாராயண்.

6. நிறையப்பேர் பாட வருவார்கள். குறைச்சலே இருக்காது. ஆனால் இப்போது இருக்கிற தரம் குறைந்து விடும்.

சரி, இவர் நண்பர் தியாகு என்ன சொல்கிறார்? பாருங்கள்:

1. மொழி, சங்கீதத்தில், ஒரு தடையாக இல்லை.

2. ராகம்-தானம்- பல்லவி கச்சேரிகளில் இருக்கவேண்டும். அப்போதுதான் ஓர் இராகத்தை முழுமையாக கேட்க முடியும்.

3. இராகத்தை அறிவிப்பது அவசியம் தான். இராகம் தெரிந்துவிடுவதால், ஈடுபாடு குறைந்து விடுவதில்லை.

4. தமிழ் கீர்த்தனைகள் பாடினால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ரசிகர்கள் கூடுதலாக வருவார்கள். ஓகோ என்று ஓரேயடியாகக் கூட்டம் வந்துவிடும் என்று சொல்லிவிட முடியாது.

5. என்னோட பட்டியல் சிறியதுதான்: 1. நேதனூரி, 2. டி.வி. சங்கரநாராயணன், 3. டி.என். சேஷகோபாலன், 4. சஞ்சய் சுப்பிரமணியன், 5. பாம்பே ஜெயஸ்ரீ, 6. காயத்ரி வெங்கட்ராகவன்.

6. பத்து-இருபது வருஷத்துக்குப் பிறகும் கர்நாடக சங்கீதம் பாடுபவர்கள் நிறையவே இருப்பார்கள். ஆனால் இப்போது இருக்கிற தரம் அப்போது இருக்குமா என்று சொல்ல முடியாது. கடந்த காலத்தை வைத்து இதைச் சொல்கிறேன்.

கடைசியாக நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியது நாராயணன் என்கிற இளைஞருடன். இவர் டாஃபே நிறுவன அதிகாரி. அமைதியாக அமர்ந்து இசைக் கச்சேரிகளை ரசிப்பதைப் பார்த்திருக்கிறேன். அவர் அளித்திருக்கிற பதில்களைப் பார்ப்போம்:

1. கர்நாடக சங்கீதத்தை ரசிக்கிறதுக்கு மொழி ஒரு தடை இல்லை. தெலுங்கு கீர்த்தனைகள் - குறிப்பாக தியாகராஜ கீர்த்தனைகள் இல்லேன்னா, கச்சேரி கேட்ட மாதிரியே இருக்காது. அடிக்கடி பாடிக் கேக்கிற கீர்த்தனைகளா இருந்தா நல்லாவே இருக்கும்.

2. எனக்கு லயத்தில் அவ்வளவு இன்ட்ரஸ்ஸ் இல்லே. இராகம்-தானம்-பல்லவி எலலா கச்சேரிகளையும் வேணும்னு அவசியம் இல்லே. நல்லா பாடறவங்க பாடும்போது கேக்க நல்லா இருக்கு. எம்.எல்.வி. பாடும்போது கேக்க நல்லா இருந்துது. பெரிய வித்துவான்கள் பாடும் போது நல்லா இருக்கு.

3. "த்ரில் ஆஃப் கெஸ்ஸிங்" போயிடும்க, பாட்டுக்கு முன்னால ராகத்தை அனவுன்ஸ் பண்ணிட்டா. தெரியலேன்னா, பக்கத்தில இருக்கறவரைக் கேட்டுக்கலாம்.

4. தமிழ்ப்பாட்டுக்கள் பாடினா கூட்டம் இன்னும் வரும் என்கிறது சரி இல்லை. ஏதா இருந்தாலும் கிளாசிகல் மியூசிக்ல இன்ட்ரஸ்ட் இருந்தாத்தான் தமிழ்ப் பாட்டுக்களையும் ரசிக்க முடியும். பாபநாசம் சிவன் கீர்த்தனைகள் எல்லாத்தையுமே, எல்லாரும் ரசிப்பாங்கன்னு சொல்ல முடியாது. நிச்சயமா தமிழ்ப் பாட்டுக்காகக் கூட்டம் வர்ரது இல்லே.

5. என்னோட பாடகர்கள் லிஸ்ட்டுல முதல்ல டி.என். சேஷகோபாலன். அடுத்ததா, லயிச்சுக் கேக்கணும்னா பி.எஸ். நாராயண ஸ்வாமி. அப்பறம் பாம்பே ஜெயஸ்ரீ, சஞ்சய் சுப்பிரமணியம், டி.எம். கிருஷ்ணா. அடுத்த படியில் இருக்கறவங்கன்னா, ரஞ்சனி-காயத்ரி, காயத்ரி வெங்கட்ராகவன். அதுக்கும் அடுத்த படில, பிருந்தா பேரன் கிரீஷ் குமார், சிக்கில் குருசரண்தான் ஞாபகத்துக்கு வர்ராங்க.

6. வருங்காலத்துல கர்நாடக சங்கீதம் நிச்சயமாக நல்லாத்தான் இருக்கும். ஆனா வேக வேகமாகப் பாடறாங்க. சௌக்க காலத்துல பாடணும். அதுக்கு ஆனே இல்லே. கீர்த்தனைகளை முழுக்க அநுபவிச்சுப் பாடினா நல்லா இருக்கும். நிறைய பிராக்டிஸ் பண்ணணும்.

இந்தக் குட்டி சர்வேயில் கிடைத்த செய்தி என்ன என்று பார்த்தேன்.

1. கர்நாடக இசையை ரசிக்க மொழி தடையில்லை.

2. ராகம்-தானம்-பல்லவி பாடலாம். அதை ரசிக்கற பக்குவம். அவகாசம் தேவை.

3. இராகங்களின் பெயர்களை அறிவிக்கத் தேவை இல்லை. ஆனால் அறிவித்தால் அது ஒன்றும் பெரிய குற்றம் அல்ல. [இந்துஸ்தானி இசைக் கச்சேரிகளில், ஆரம்பத்திலேயே என்ன இராகம், என்ன தாளம் என்று அறிவித்துவிடுகிறார்கள். அதனால் ரசிகர்களுக்கு இழப்பு ஏதும் இல்லை!]

4. தமிழ் கீர்த்தனைகளை அதிகம் பாடலாம். ஆனால் கூட்டம் அதிகம் வரும் என்று உறுதியாகக் கூற முடியாது.

5. கிட்டத்தட்ட, இன்று முன்னணியிலிருக்கும் அத்தனை மூத்த இளம் கலைஞர்களின் பெயர்களையும் சொல்லிவிட்டார்கள். அதனால் இவர்களுக்கு நிச்சயமாக ஒரு கூட்டம் இருக்கிறது என்று புரிகிறது.

6. இன்னும் 10-20 வருடங்களுக்குப் பிறகும் கர்நாடக இசை வாழும். [ஆனால் அப்போதும் "அன்னிக்கு இருந்தது மாதிரி இன்னிக்கு இல்லே!" என்று அலுத்துக் கொள்ளும் பெரிசுகள் இருப்பார்கள்!].

டிசம்பர் சீசனில் மட்டும், பல சபாக்களில் பல புதிய முகங்களைப் பார்க்க முடிகிறது. மற்ற நாட்களில் இவர்கள் எந்தக் கச்சேரிக்கும் வந்து போவதில்லை என்பதை நினைக்கும் போது சற்றே வியப்பு ஏற்படுகிறது. "ஒரு ஃபெஸ்டிவல் மாதிரி வைத்தால் நிச்சயம் கூட்டம் அதிகமாக வருவது உண்மைதான்" என்று ஓர் அமைப்பாளர் சொன்னார்.

தேர்த்திருவிழா, கோயில் உற்சவ விசேஷ நாட்கள் போல, சங்கீத சீசனில் சபாக்களில், அதுவரை வீட்டிலேயே இருந்து இசையை ரசித்த குடும்பங்கள் வருவதைப் பார்க்கிற போது மேற்படி கூற்று உண்மைதானோ என்று தோன்றுகிறது.

கர்நாடக இசையை சினிமாவில் எதிர்பார்க்கின்றனா சிலர். தேவையற்ற எதிர்பார்ப்பு இது என்பது என் எண்ணம். கர்நாடக இசை பாரம்பரிய கிளாசிகல் இசை. பல சமரசங்களுக்குப் பிறகு உருவாகும் திரை இசையை ஒப்பிடும்போது, அதன் ரசிகர் வட்டம் சிறியதே. ஆனால் அதன் கௌரவமும், ஆயுளும் மிக உயர்வானது, மிக நீண்டது என்று புரிந்து கொண்டால், இந்தக் குறையை ஒரு புலம்பலாக வெளிப்படுத்துவது நின்று போகும்.

"ஒரு பாட்டு ஹிட்டாகி, அடுத்த பாட்டு வரும் போது, சினிமா ரசிகர்கள் பழைய ஹிட்டை மறந்துவிட்டு, புதிய பாடலை முணு முணுக்க ஆரம்பிக்கிறார்கள். அதன் ஆயுளும் அடுத்த ஹிட் வரும் வரைதான்!" என்றார் ஒரு திரை இசை அமைப்பாளர், ஒரு பேட்டியில்.

ஆனால் எத்தனை நூற்றாண்டுகளானாலும், தோடியையும், கல்யாணியையும், ஹிந்தோளத்தையும், சின்ன பிற இராகங்களையும், இந்த இராகங்களில் அமைந்த சாகித்யங்களையும், வரும் தலைமுறைகளில் சில ஆயிரம் பேர்களாவது உலகில் ஒவ்வொரு மூலையிலும் கேட்டு ரசித்துக் கொண்டே இருப்பார்கள். இத்தனை நூற்றாண்டுகளாக, யாருடைய பெரு முயற்சியும் இல்லாமலேதானே இவை நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றன?